**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன்– 2015–16 ஆம் நிதியாண்டு சுதந்திர தின விழா 2015 –மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்தவர்களுக்கு தமிழக அரசின் விருதுகள் வழங்கியது– கூடுதல் நிதி ரூ.1,78,000/– ஒப்பளிப்பு செய்வது ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1D) எண்.22

நாள்: 25–08–2015
மன்மத, ஆவணி 8,
திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்க:

1. அரசாணை(டி) எண்.14, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை,நாள் 21–07–2015.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கடித எண்.2139/ இவாததி–விருதுகள்/2015, நாள் 31.07.2015.
3. அரசாணை(பத்தாண்டு)எண்.19. மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 12–08–2015.

--------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2015–16 ஆம் நிதியாண்டில், 2015 ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவில் மாற்றுத் திறனாளிகள் நலனுக்கென சிறப்பாக சேவை புரிந்த நபர்கள் / நிறுவனங்களுக்கு, தமிழக அரசு விருதுகளை வழங்கும் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தவும் அதற்கென செலவின தொகையாக ரூ.3,01,000/– மட்டும் ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. தற்போது மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது கடிதத்தில், மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்த சிறந்த தொண்டு நிறுவனம், சிறந்த மருத்துவர், சிறந்த தனியார் தொழிலதிபர், சிறந்த சமூகப் பணியாளர், சிறந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஆகியன தலா ஒன்று வீதம் சுதந்திர தின விழா அன்று வழங்கிடவும், சிறந்த மாவட்ட ஆட்சித் தலைவர் விருதினை, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் வழங்கிடவும், அதற்கான செலவினம் மேற்கொள்ள நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளதனை குறிப்பிட்டு, மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் கூடுதலாக 2 சிறந்த மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் கூடுதலாக ஒரு சிறந்த தொண்டு நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு விருது வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளததால் தற்போது, 9 விருதாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். எனவே, கூடுதலாக இரு மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் ஒரு தொண்டு நிறுவனம் தேர்வு செய்யப்பட்டுள்ளதால் ஏற்கனவே ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையைவிட ரூ.1,78,000/– கூடுதலாக ஒதுக்கீடு செய்யுமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, மேலே மூனறாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் கூடுதலாக 2 சிறந்த மாவட்ட ஆட்சியாளர்கள் மற்றும் ஒரு தொண்டு நிறுவனம் உட்பட, 9 தங்கப் பதக்கங்கள் மற்றும் ரொக்கப் பரிசுகள் வழங்கிட ஆணையிட்டதற்க்கு ஏற்ப, கீழ்காணும் விவரப்படி ரூ.1,78,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து எழுபத்து எட்டாயிரம் மட்டும்) கூடுதல் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தங்கப்பதக்கம் | ரொக்கப் பரிசு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர் | ரூ. 26,000/– | ரூ.25,000/– | ரூ.51,000/– |
| 2. | மாவட்ட ஆட்சியர் | ரூ. 26,000/– | ரூ.25,000/– | ரூ.51,000/– |
| 3. | சிறந்த தொண்டு நிறுவனம் | ரூ. 26,000/– | ரூ.50,000/– | ரூ.76,000/– |
| | மொத்தம் | ரூ.78,000/– | ரூ.1,00,000/– | ரூ.1,78,000/– |

4. மேலே, பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட, நிதி ரூ.1,78,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து எழுபத்து எட்டாயிரம் மட்டும்) கீழ்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:–

“ 2235– சமூகப் பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன் –001–நெறிப்படுத்தலும் நிருவாகமும்–I திட்டத்தில் சேராதது AF- மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகம்–59–பரிசுகளும் வெகுமதிகளும்”
(கு.தொ.கு. 2235 02 001 AF 5906)

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.46621/நிதி(சந)/2015, நாள் 20.08.2015ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
தலைமைக் கணக்காயர், சென்னை–35.
மாநிலக் கணக்காயர், சென்னை–18. (பெயரில்)

<u>நகல்:–</u>
நிதி (சந) துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி .

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.